தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி ஹு பங்குனி மீ 5உ (18-3-'23.) | ப. 45.

விஷய அடக்கம்.

1. உலக நடை ... 457
2. ஏனாதிநாத நாயனார் ... 458
[துகளன்.]
3. ஒலி ... 459
[K. N. சுந்தரேசன், M. A.]
4. புயற் காற்று ... 459
V. [நாராயணையர், M.A., M.L.,]
5. மதிப்புரை ... 463

தமிழ் உலகு
(THE TAMIL WORLD)
ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்
தமிழ் வாரப் பத்திரிகை
பத்திராதிபர், S. பட்டாபிராமன், M. A.
சந்தா விவரம்:—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் ரூ. 3 0 0	½-வருஷம் ரூ. 3 8 0
1-வருஷம் ரூ. 5 0 0	1-வருஷம் ரூ. 6 0 0

'தமிழ் உலகு' கார்யாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்,
மைலாப்பூர், சென்னை.

உலக நடை

இன்று மகாத்மா காந்தியைக் கைது செய்து ஒரு வருஷமாகிறது. இந்த ஒரு வருஷத்தில் என்னென்ன நடந்தன என்று யோசித்தால் ஆரம்பத்திலே தேசிய விஷயங்களிலிருந்த ஊக்கம் குறைந்து ஜனங்கள் கைகடந்த விஷயத்தில் துன்புறுவது வீணென ஓய்ந்து அமர்ந்தார்கள்போல் அயர்ந்திருக்கிறார்கள். சென்ற வருஷம் இத்தருவாயில் நாடெங்கும் பரவிய கோபகோஷம் அமர்ந்துவிட்டதே! 'கதர்' என்ற பேச்சு மங்கி விட்டதே! சட்ட சபையை நாடுவது நலமே என்று கருதும் கக்ஷி யொன்றும் ஏற்பட்டு இருக்கிறதே! மஹாத்மா காந்தி இப்பொழுது வெளிவந்தால் சட்ட சபையில் சேருவதே மேல் என்பார் என்கிறார்கள் இக்கக்ஷியைச் சேர்ந்தவர்; வேறு சிலர் காந்தியடிகளின் பேச்சை மீறக்கூடாது, அதுவே தருமம் என்கின்றனர். ஒரு வருஷ காலத்திற்குள் இவ்விதம் கக்ஷி பிரதி கக்ஷிகள் ஏற்பட்டு காங்கிரஸ் சபையின் பலம் ஒருவாறு குன்றியதோ என்று மயங்கும்படியாய் ஆனதற்குக் காரணம் நாடெங்கும் சற்றும் சந்தேகமின்றி "இவரிட்ட படி நடப்போம்" என்று பின் தொடரத் தகுந்த பெருமை வாய்ந்த மகாத்மா ஒருவர் நம்முன் இராததாலன்றோ?

* * *

ஆயினும் நாம் முற்றும் விசனிக்க இடமில்லை; எவ்வளவு ஆண்டுகள் சென்றாலும் இனி இந்தியர்கள் பழைய அபிப்பிராயங்களைக் கைக்கொள்ள மாட்டார்கள்; அரசாங்கத்தாரின் செல்வாக்கும் அவர்களிடம் ஜனங்களுக்கு இருந்த பயபக்தியும் போயிற்று; அவர்கள் அளிக்கும் பட்டங்களின் கௌரவம் அடியோடு தொலைந்தது; சட்ட சபைகளுக்கும் இனி அவ்வளவு கௌரவம் இருக்க இடமில்லை; ஜனங்கள் ஒவ்வொரு விஷயத்திலும் தங்களுடைய சொந்த அபிப்பிராயங்களை உடையவராய் கண்மூடிக் கீழ்ப்படிந்து நடப்பதை விட்டு விட்டனர். இவ்வித நன்மைகள் எல்லாம் மகாத்மாவைக் கைது செய்தவுடன் அகன்று போகவில்லை; முன்னிலும் அதிக பலத்துடனே மஹாத்மா போட்ட விதை வேரூன்றி வளருகிறதே யொழிய அவர் பார்வை யில்லாததால் மடியவில்லை; இப்பொழுது சற்று வாடிக் கருகியது போலிருந்தாலும் இனி சுதேசிச் செடி அற்றுப்போகாது என்பதற்கு அறிகுறிகள் பல தென்படுகின்றன.

* * *

சென்ற கயா காங்கிரஸில் சபை இருவகுப்பாய் பிரிந்த பின், அவ்விரு வகுப்பாரும் மத்தியஸ்தமாய், ஒருவருக் கொருவர் எவ்விதம் நடந்து கொள்வது என்பதைப்பற்றி இருதிறத்துத் தலைவரும் ஒன்று கூடி ஆலோசித்தனர். அதன் பயனாக (1) சட்ட சபைகளுக்குப் போகலாமா? என்ற விஷயத்தைப்பற்றி இருதிறத்தாரும் ஏப்ரல்மீ 30உ வரை பேசி தங்கள் கக்ஷிக் கொள்கைகளை வற்புறுத்துவதில்லை. (2) மற்ற விஷயங்களில் இருகக்ஷியாரும் தங்கள் தங்கள் கொள்கைகளைப் பரவச் செய்யலாம்; ஆனால் ஒருவருக் கொருவர் இடையூறுகளைச் செயயாமல் நடந்து கொள்ள வேண்டும். (3) பணத்தையும் வாலண்டியர்களை

சென்னை ஜார்ஜ் டவுன் ஸ்டிரிங்கர்ஸ் தெருவு, டையமெண்டு அச்சுக்கூடத்தில்
ஆர். வெங்கிடாசலம் செட்டியாரால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16,
'தமிழ் உலகு' கார்யாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.

அதாவது சுதேசக்கிளர்ச்சி [illegible]யும் பற்றிய விஷயங்களில் பெருங் கக்ஷியார் இஷ்டப்படியே சயாகாங்கிரஸின் தீர்மானப்படி நடக்க வேண்டும். (4) அவ்விதம் பணம் முதலியவற்றை சேகரிப்பதிலும் மற்றப்படி சயாகாங்கிரஸின் தீர்மானப்படி நடப்பதிலும் இரு கக்ஷியாரும் இஷ்டப்பட்டால் ஒத்து உழைக்கலாம். (5) ஏப்ரல் 30உக்குப் பின்பு இந்த நிபந்தனைகளின்றி இருதிறத்தாரும் தங்கள் தங்கள் கொள்கைகளின்படி நடந்து கொள்ளலாம். (6) ஒருவேளை இப்போதிருக்கும் சட்டசபைகள் வாயிதாவிக்கு முன் கலைய நேரிட்டால் இந்த ஷரத்துகளை மாற்ற அதிகாரமுண்டு; என்று இருவரும் ஒத்திருக்கின்றனர்.

* * *

இருதிறத்தோரும் ஒரு விதமாய் ஒத்து உழைக்க சம்மதித்தது நன்றே; இதற்குள்ளேயே காங்கிரஸ் சபையின் மகிமை போய் விட்டது; இரண்டாக அது பிளந்து பலனற்றதாய் விட்டது; இனி தேச நன்மைக்கு உதவுவோர் ஒருவரை யொருவர் எதிர்த்து மடிவார்கள் என்ற சந்தேகங்களும் ஏக்கமும் உண்டாயின; அவைகள் வீண் எனப் புலப்படச் செய்தது அலஹாபாத்தில் நடந்தேறிய இந்த உடன் படிக்கை.

* * *

மஹாத்மா காந்தியின் தலைமை நீங்கிய காலத்தில் காங்கிரஸின் ஒற்றுமையற்று இரு பிளப்பாய் பிரிய நேரிட்டது விசனிக்கத்தக்கது; ஆனால் போலி ஒற்றுமை தாங்கி வெளிக்கு மட்டும் ஒத்துழைப்பது போல் நடந்து கொள்ளாமல் இருதிறத்தாரும் தங்கள் தங்கள் கொள்கைகளைக் கைவிடாது நடக்க முயன்றார் என்பது தேச உழைப்பில் அவர்களுக்கு இருக்கும் தீவிர பக்தியையே காட்டுகின்றதன்றோ? தங்கள் கொள்கைகளுக்கு நாசமின்றி சச்சரவின்றி பொதுவான விஷயங்களில் மட்டிலும் ஊக்கத்துடன் உழைப்பது; மற்ற விஷயங்களைப் பற்றிப் பின்னால் யோசித்து, தங்கள் கொள்கைகளை மனச்சாட்சிக்கு அநுகுணமாய் மாற்ற முடியுமா என்று தீர்மானிப்பது என்ற எண்ணத்துடன் இருகக்ஷியாரும் ஒத்து நடப்பது போலி யொற்றுமையைக் கையாள்வதிலும் மேல் அல்லவா?

* * *

சட்ட சபைகள் கலையுமுன் அதிக ஊக்கத்துடன் வேலை செய்கின்றன; செலவுகளைக் குறைப்பதிலும் ஜனங்களுக்கு தங்களால் ஆக்கக்கூடிய நன்மைகளைக் காட்டுவதிலும் உத்சாகமாயிருக்கின்றன. ஏனெனில் கலைந்தபின் மறுபடி சேருமுன் இவ்விரண்டு வழிகளைக் கொண்டுமே ஜனங்கள் இவைகளின் உபயோகத்தைப்பற்றித் தீர்மானிப்பார்கள்.

* * * *

சுதேசமித்திரன் பத்திராதிபர் ஸ்ரீமான் அ. ரங்கஸ்வாமி ஐயங்கார் அவர்கள் ஆங்கிலத்தில் ஒரு வாரப்பத்திரிகை சுதேச மித்திரன் என்ற பெயர் கொடுத்துத் துவக்கியிருக்கின்றனர். இது தற்கால ராஜாங்க நீதியில் தேசபந்து சித்தரஞ்சன தாஸரின் அபிப்பிராயங்களை மேற் கொண்டிருக்கிறது; தமிழ் நாட்டிலும் பிறதேசங்களிலும் உள்ள தமிழருக்கு 'சுதேசமித்திரன்' உதவும் உதவியை வேறு பாஷைகள் மட்டும் தெரிந்தவருக்கு உதவுவதை இது உத்தேசமாகக் கொண்டிருக்கிறது.

சென்னையில் ஜல 'ஸப்ளை' விஷயமான சில விஷயங்கள் வியப்பைத் தருகின்றன; நன்கு வடிகட்டி அழுக்கு நீங்கிய ஜலத்துடன் அவசரமாய் வடிகட்டின ஜலத்தையும் 'குலோரின்' திராவகத்தால் அழுக்கெடுக்கப்பட்ட ஜலத்தையும் கலந்த அசுத்தமான மிசிரத்தையே குழாய்களில் பாய்ச்சுகிறார்கள் என்பதைப் பலர் அறிந்திருக்கலாம்; அவ்விதம் அனுப்பப்பட்ட ஜலமும் பாயும்போது இன்னும் பல அசுத்தங்களுடன் கலக்கின்றதாம்; குழாய்களில் வெடிப்புகள் சந்துகள் ஓட்டைகள் இவை உண்டாகின்றன; அவை வழியே அழுக்குகள் ஜலத்துடன் கலக்கின்றன; மேலும் அவைகளால் பாதி ஜலம் குழாய் வழியே பாயாமல் வீணாகின்றன. இப்படி வீணாவதை அறியாமல் அதிக ஜலம் செலவழிகிறது என்று ஜலத்தைப் பாயவிடாது குறைப்பது பிசகு; வீணாகவொட்டாமல் தடுக்கும் விதத்தை உடனே அறிந்து அவ்விதம் தடுப்பது கடமை என்பதை சென்னை நகரவாஸிகள் நகர பரிபாலனர்களான 'கவுன்ஸிலர்'களுக்கு வற்புறுத்த வேண்டும்.

ஏனாதிநாத நாயனார்.

(துகளன் எழுதியது)

பத்தனை யேனாதி நாதனைப் பார் நீ டெயினை தன்னு
ளத்தனைத் தன்னோடமர் மலைந்தானெற்றி நீறுகண்டு
கைத்தனிவாள் வீடொழிந்தவன் கண்டிப்ப நின்றருளு
நித்தனை யீழக் குலதீப னென்பரிந் நீணிலத்தே—

—திருத் தொண்டர் திருவந்தாதி.

ஏனாதி நாதர் ஈழ குலத்திலுதித்த பெரும் போர்வீரர்; அவர் சிவனுக்குப் பக்திசெய்து எயினனூரில் அரசு செலுத்தி வருநாளில், தானே போர்வலியில் மிக்கோன் என்ற பெருமிதங்கொண்ட போர்வலாளன் அதிசூரனென்பான் ஒருவன் ஏனாதி நாதரின் போர்த்திறனைக்கேட்டு அவர்மேல் வெற்றிகொள்ள விரும்பி படையெடுத்து வந்தான்; வந்தவனை பல முறைப் போரிற் பின்வாங்கச்செய்தார் ஏனாதி நாதர்; இவ்விதம் புறகிடநேர்ந்த அவமானத்தைப் போக்க இவரை ஈனமிகு வஞ்சனையால் வெல்வேன் என வெண்ணினான் அதிசூரன். உடனே ஏனாதி நாதருக்கு ஒரு ஆள் அனுப்பி "நாட்டாரைக் கொல்லாதே நாம் இருவரும் வேறு இடத்தில் தனியே போர் புரிவோம்" என்று சொல்லி அனுப்பினான். அதற்கு உடன்பட்ட நாயனார் சொல்லிய வேளையில் பகைவன் தனிக்களத்தில் வரவு பார்த்து நிற்க, தீங்கு குறித்து அழைத்த தீயோன், ஏனாதி நாயனார் திருநீறு தாங்கியவருக்கு என்றும் தீங்கு இழையார் என்றறிந்தவனாய் வெண்ணீறு நெற்றி விரவப்புறம் பூசி, உண்ணெஞ்சில் வஞ்சக் கறுப்பும் உடன்கொண்டு மணிப் பலகை கைக்கொண்டு, புண்ணியப் போர் வீரர்க்குச் சொன்ன இடம் புகுந்தான். அப்பொழுது நெற்றித் திருநீறு கண்டால் படையெடார் என்று தன் நெற்றி முழுமையையும் பலகையால் மூடிநின்றான். பிறகு போர் முனைய, பகைவனைக் கீழே வீழ்த்திய நாயனார் அவன் தலையை வீசி எறிய வாளை ஓங்கியபோது பலகைப்புறம் பேர்ந்ததால் அவன் நெற்றியின்மேல் பூசிய வெண்ணீற்றைக் கண்டார்.

கண்டபொழுதே, " கெட்டேன்! முன்பு இவர் மேல் காணாத வெண் திரு நீற்றின் பொலிவு இவர் மேல் கண்டேன்! வேறு இனி என்ன! இவர்

அண்டர் பிரான் சிரடியார் ஆயினார். என்று தான் கைவாளுடன் பலகை முதலியவற்றை நீக்கினால் இவர் நிராயுதனைக் கொன்ற பாபத்திற் படுவார் என்று பயந்து, ஆயுதங்களைத் தாங்கி அடர்த்து நேர்வார்போல் அயல் நிற்க, அந்தப் பாதகன் அந்த சூரனும் தன் கருத்தை முற்றுவித்தான். இவ்விதம் பகைவன் வாளால் பசு பாசத்தை அறுக்கச் செய்த ஈசனார், நாயனார் கண்முன் விடையேறி, பொற்றொடியாள் பாகனாராய்த் தோன்றி அவரை சிவலோகங் கூட்டிச் சென்றனர் என்பது இந் நாயனாரின் சரித்திரம்.

திருநீறு பூண்டவர் யாவரும் அடியார்கள்; அவர்கள் கருத்தை நாம் பரீக்ஷிப்பது தகுதியன்று; அவர்களுக்கு யாதேனும் பாதகம் வராவண்ணம் நம்முடைய உயிரையும் அவர்களுக்கு உதவுவதே கடமை என்று கொண்ட இந் நாயனார் திடபக்தி பெரிது போற்றத் தக்கதே.

ஒலி.

[K. N. சுந்தரேசன்.[

குளக்கரையில் ஒருவன் வேஷ்டி தோய்க்கும் சத்தம் எதிர்க்கரையில் நிற்பவனுக்கு கல் மேல் துணி விழுவதை கண் பார்க்கும் தக்ஷணமே கேட்கிறதில்லை. அதுபோலவே பாணவேடிக்கைகள் போது, ஆகாயத்தில் உயர வெடி குண்டு பல வர்ணப் பொறிகளை ஜோதிமயமாய் வீசி இரைத்து சில நொடிகளான பிறகே வெடிச்சத்தம் கீழ் நிற்பவற்குக் கேட்கிறது. இதனால் தெரிவது யாது? இடையே உள்ள தூரத்தைத் தாண்டி நமது செவிகளில் வந்து பட ஒலிக்கு காலம் பிடிக்கிறது. இதன் வேகமோ விநாடி ஒன்றுக்கு 1100 அடி தூரம் என கணித்திருக்கிறார்கள்.

இந்த சத்தம் நமக்கு எப்படி வந்து சேருகிறது? குளத்தின் நடுவில் ஒரு கல்லை எறிந்தால் கல் மறைந்தபின், நாலா திசைகளிலும் வட்டம் வட்டமாய் சிறு அலைகள் எழுந்து கரை நோக்கி நீந்துகின்றன. இவ்வண்ணமே சத்தம் தோன்றுமிடத்திற்கு சுற்றி எல்லா பக்கமும், எங்கும் பரவி நம்மை சூழ்கின்ற காற்று அலை அலையாய் புறப்படும். இவ் அலைகள் நம் செவியில் புகுந்தவுடனே அந்த ஒலியை உணர்கிறோம். எனினும், சத்தம் ஏற்பட்ட இடத்துக்கு அருகிலுள்ள காற்றே ஒலி யலைகளில் மிதந்து நம்மிடம் வந்து சேர வேண்டியதில்லை. குள நீரில் கல்லெறிந்த இடத்திற்கருகே ஒரு புல் மிதக்குமாயின், அணுவளவும் புல் நகராமல் மேடு பள்ளங்களில் தத்தளித்து ஊசலாடிக் கொண்டு மட்டும் இருக்க முடியாதா? அலைகள் வேறு, தண்ணீர் வேறு, அங்ஙனமே இங்கேயும் அலைகள் வேறு, காற்று வேறு. அலைகளே ஒலியை உணர்த்துகின்றன. அலைகளின் நீளத்துக்கும் உயரத்துக்கும் பொருந்தி யிருக்கும் ஒலியின் குரலும் ஓசையும். அலைகள் சிறிது தூரம் சென்று வேகமும் பலமுமில்லாமல் ஓய்ந்து நின்று விடலாமாகையால் எல்லோருக்குமே கேட்பதில்லை ஒரு சத்தம். இதுபற்றியே தூரப் போகப் போக ஒலியின் ஓசை தேய்கிறது.

அலை வேறு, தண்ணீர் வேறு தான் ஆயினும் தண்ணீரில்லையேல் அலை உண்டோ? தற்சமயத்துக்கு தண்ணீரே அலை யுருவத்தைக் கொள்கிறது. ஆதலால் காற்றில்லாவிடின் சத்தமும் கேட்காது என்று எளிதில் புலப்படும். சதா நம்மை சூழ்கிற காற்று பூமண்டலத்தை விட்டு என்றேனும் ஒழியுமாயின், மூச்சுவிட முடியாமல் அனைத்தும் மாண்டுபோம் என்ற பெருங் கோர சம்பவம் ஒருபுறமிருக்க, புது புது வியப்புகள் அப்பொழுது தோன்றுவதில் முக்கியமானது: தெரிந்து நாம் பழகிய பலவகை ஒலிகளை நாம் கேட்கவே முடியா! தொண்டையும், செவியும் கடவுள் அளித்தது வீணே! பேசுவோர் குரல் வெளியேறி உலாவ வழியுமில்லை—கேட்போர் காதுக்கும் யாதும் வரமுடியா! நக்ஷத்திர கணங்கள் ஏன் ஊமையாய் கண்ணை மட்டும் சிமிட்டுகின்றன? நாற்பது மைலுக்கு மேலே, இடையே காற்றேயில்லாமல் அலகிலா ஓர் "நிர்மய"க் கூட்டில் அவை அடைபட்டிருப்பதால் நமக்கு வந்து, ஒலி அலைக்க வழியே யில்லை.

எனினும், காற்று மட்டுமல்ல, மற்றவை மூலமாயும் ஒலி செல்லக்கூடும். கட்டை, இரும்பு, தண்ணீர், தரை, கல், சுவர்—இதாவைகளிலும், வெவ்வேறு வஸ்துக்களில் காற்றில்விட வெவ்வேறு வேகத்துடன், வீணைக் கம்பிகளை மீட்டினால் எவ்வாறு அலைக்கின்றவோ அங்ஙனமே ஒலி ஊடுருவிப்பாயும். தரையில் படும்படி செவியை சாய்த்து, கவனித்தால் வெகு தூரத்துக்கு அப்பால் உருளும் வண்டிச்சத்தமும் குதிரை யடிகளும் நன்றாய்க் கேட்கலாம். தண்ணீரடியில் கல் மேல் கல்லைக் கொட்டினால் 10 மைல் தூரத்துக்குக்கூட தண்ணீரில் மூழ்கினவருக்கு மிகத் தெளிவாய்க் கேட்கிறதாம். ஆனால் சுவர், பலகை முதலிய இடையே தடுத்தால் ஒலி கடக்கிறதில்லை. வந்த வழியே திரும்பிவிடும். இதுபற்றி தான் சில அறைகளில், ஏதாவது நாம் பேசினால் யாரோ ஒரு போக்கிரி அதே வார்த்தைகளை கிளிபோலப் பேசி நம்மை கேலி செய்வது போலத் தோன்றும். இவ் எதிரொலிகள் சுவற்றுக்குச் சுவர் மேலும் கீழும் அங்குமிங்கும் அலைகளால் மோதுண்டு நாம் பேசியதை—முக்கியமாக, இறுதிச் சொற்களை—திரும்பியும் பல குரல்களுடன் தோன்றுகின்றன. ஆனால் அறைகளில் துணி மணிகள், கட்டை முதலாய நிறையுமாயின், இம்மெதுவான சாமான்களால் ஒலி எதிர்த்துத் தள்ளப்படாமல் அடங்கி அமர்ந்து விடும். மலைச்சாரல், கற் குன்றுகள் இவைக்கு எதிரே, பேசும் சத்தம் போய்த் தாக்கி திரும்பிவர போதுமான தூரத்தில் நின்று பேசி, சொற்கள் மட்டுமல்ல—நீண்ட வாக்கியங்களும் கூட கேட்டு வியப்புற்றிருக்கிறார்களாம், பலர்.

புயற் காற்று.

[V. நாராயணையர் M. A, M. L.,]

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அந்தபாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச் சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பி வரும் போது புயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்யாண காலத்தில் தன் புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் எனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தாணி சரணரின் தமையன்

மகள் என்றும், வேறு ஒருவர் மனைவி என்றும் அறிந்ததும், ஹேமநளினியை மறுபடி நாடி கல்யாணத்திற்கு உடன்பட்டதும்; யோகேந்திரன் அக்ஷயனுடன் இராமேசன் வீடு சென்று அங்கு இருந்த கமலாவுடன் இராமேசன் பேசிக்கொண்டிருந்ததை நேரில் பார்த்து இராமேசனோடு ஆத்திரத்துடன் வாதாடி கல்யாண ஏற்பாட்டைக் குலைத்ததும்; இராமேசன் கமலாவுடன் கப்பல் மார்க்கமாய் வேறு இடம் நோக்கிச் சென்றதும்; பிரயாண காலத்தில் ஒரு நாள் இராமேசன் கமலாவுக்கு கதை சொல்லுவது போல் தன்னுடைய சரித்திரத்தைச் சொல்லி கமலாவை கலங்கச் செய்ததும், சமையல் வேலைக்கு உதவி புரியும்படி அமர்த்தப்பட்ட உமேசனுடைய பரிதாப நிலையைக் கேட்டு கமலா அவன்பால் கருணை கொண்டதும்; பிறகு அதே கப்பலில் வந்த சக்கிரவர்த்தி "மாமா" என்பவருடன் சிநேகமானதும்; அவருடைய விருப்பத்தின் பேரில் அவரூராகிய காஜிப்பூரில் இராமேசன் வக்கீலாய் அமர்வதென்று தீர்மானித்ததும்; காஜிப்பூர் வருமுன் இராமேசன் அத்தீர்மானத்தை மாற்ற முயன்றதும் கமலா அதற்குச் சம்மதியாது திடமனதாய் இருந்ததும், சென்ற சஞ்சிகைகளிலுள்ள கதை]

கங்கைக் கரையோரமாய் பிரத்யேகமாய் தனி இடத்தில் கட்டப்பட்டிருந்த ஒரு வீட்டை அமர்த்தினான் இராமேசன்; தன் சாமான்களை எடுத்துவந்து காஜிப்பூரில் வக்கீல் வேலையில் அமர்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய கல்கத்தாவுக்கு அவசியம் போக வேண்டியிருந்தது; அவ்வூருக்குப் போக நடுங்கினான் இராமேசன். அங்கேயுள்ள ஒரு தெருவின் ஞாபகம் வரவே அவன் மனம் துயரததால் சாலவும் வருந்தியது. இன்னும் இந்த ஏமாற்ற நடவடிக்கைகளினின்றும் தான் தப்பவில்லையே; என்றாலும் இனியும் கமலாவின் கணவன் என்பதனால் உண்டாகும் சகல கஷ்டங்களையும் மேற்கொள்ளாமல் தாமதித்து சஞ்சலப்படக்கூடாது அல்லவா?

இப்படி புறப்படாமல் தீராதென்று ஏற்படவே, புறப்படுவதைத் தாமதப்படுத்திக்கொண்டே இருந்தான் இராமேசன்.

அவர்கள் இறங்கி இருந்த சிறு பங்களாவில் இடம் போதாமையால் கமலா ஸ்திரீகள் இருக்கும் பின், கட்டிலேயே இருக்க நேரிட்டது; தான் முன்கட்டில் இருக்கவே அவனும் கமலாவும் சந்திப்பது முடியாததாயிற்று. இவ்விதம் பிரிந்திருக்கும்படி நேரிட்டதே என்று தன் விசனத்தைக் கமலாவிடம் தெரிவித்தாள் சைலஜா.

"அதனால் என்ன? அவ்வளவு கடினமா, பிரிந்திருப்பது" என்றாள் கமலா.

சைலஜா சிரித்துக் கொண்டே! "என்ன கல்மனது உனக்கு! இப்படி எல்லாம் என்னை ஏமாற்ற முடியாது என்னை! உன் மனதிலிருப்பது எனக்குத் தெரியும்."

உண்மையாய்ச் சொல்லு விபனபாபு உன்னருகில் இரண்டு நாள் வரவில்லை என்று வைத்துக் கொள்வோம்; அப்போது உன் மனது—

"என்ன, இரண்டு நாளா? என்னைவிட்டுப் பிரிந்திருப்பாரா?" என்று பெருமைபேசினாள் சைலஜா. பிறகு சில உதாரணங்களை விபினபாபுவின் நடத்தையினின்றும் எடுத்துக் காட்டினாள்; கல்யாணமான புதிதில் இடையூறாக நின்ற கிழவர் கிழவிகளுக்குத் தெரியாமல் என்னென்ன தந்திரங்களால் தன்னை அவர் வந்து பார்த்து வார்த்தையாடினார் என்பதைப்பற்றியும்; அந்த தந்திரங்கள் பலிக்காது போன சமயங்களைப் பற்றியும்; சில வேளையில் கையும் களவுமாய் அகப்பட்டுக் கொண்டதைப் பற்றியும்; ஒருவரை யொருவர் கண்டு பேசக்கூடாது என்று தடுக்கப்பட்ட போது பெரியவர்கள் காணாதபடி சாப்பாட்டு வேளையில் கண்ணாடியின் பிரதி பிம்பங்களின் வழியே ஒருவரோடொருவர் கண்ணால் சமிக்ஞைகள் செய்து கொண்டதையும்; பேசும் போது அந்தக் காலங்களில் அநுபவித்த விநோதங்கள் ஞாபகத்திற்கு வரவே சைலஜாவின் முகம் விகசித்து விளங்கிற்று.

பிறகு விபினர் கச்சேரிக்குப் போய் பகற்பொழுதெல்லாம் வேலை செய்ய நேர்ந்ததும், ஒருவரையொருவர் பிரிந்ததால் உண்டான வருத்தத்தையும் சிற்சில வேலைகளில் கச்சேரித்தும்பை யறுத்துக் கொண்டு விபினர் வீட்டுக்கு வந்தபோது உண்டான சந்தோஷத்தையும் பற்றிப் பேசினாள்.

ஒரு சமயம் ஏதோ தம் தகப்பனார் காரியமாக விபினர் "பாட்னா" வுக்கு செல்வதென்று புறப்பட்டபோது சைலஜா அவரிடம் "பாட்னாவிற்குப் போய் தனித்திருக்க உங்களால் முடியுமா?" என்று கேட்டதையும் அதற்கு அவர் "ஓ! முடியாமல் என்ன?" என்று பெருமையாய் பேசியபோது சைலஜா கர்வபங்க மடைந்து அவர் புறப்படுவதில் தனக்கு யாதொரு மனவருத்தமும் இருப்பதாகக் காட்டக்கூடாது என்று தீர்மானித்து தைரியமாய் இருக்க முயன்றதும், அந்த தைரியமெல்லாம் இறுதியில் கண்ணீராய் கரைந்ததையும், அடுத்த நாள் புறப்பட எல்லாம் ஸித்தமான பின் விபினருக்குத் தலைவலியும் வேறு ஏதோ ஓர் அதிசய நோயும் உண்டாகி பயணத்தை மாற்ற நேர்ந்ததையும், அப்போது வைத்தியர் வந்து விபினருக்குக் கொடுத்த மருந்தை அவர் சென்ற பின் விபினரும் சைலஜாவும் சாக்கடையிற் கொட்டி விட்டதையும், யாதொரு மருந்துமின்றி நோயாளி உடனே ஸ்வஸ்தமான அதிசயத்தையும் எடுத்து விவரித்துச் சொன்னாள் சைலஜா.

இப்படி பழைய ஞாபகங்களால் தூண்டப்பட்ட பேச்சு மும்மரத்தில் சைலஜாவுக்கு பொழுது போனது கூடத்தெரிய வில்லை போலிருந்தது; ஆயினும் வாசற்கதவருகில் ஒரு சிறு சத்தம் கேட்கவே, உடனே எழுந்து சென்றாள் குதூகலத்துடன்; ஆம், விபினபாபு கச்சேரியினின்றும் திரும்ப வந்து விட்டார். பார்வைக்கு பழங்கதைகளைச் சொல்லும் சந்தோஷத்தில் மனஞ் செலுத்திக் கொண்டிருந்தவள் போலிருந்த் சைலஜா, வாஸ்தவத்தில் தோட்டத்திற்கு வெளியே ரஸ்தாவில் வரும் அவர் காலடிச் சப்தத்தையே எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருந்தாள் அன்றோ?

சைலஜா இல்லற வாழ்க்கையில் இவ்விதம் ஊக்கத்தோடு மனஞ் செலுத்தியது வீண் ஏமாற்றம் என்று கமலா கருதினாள் என்று நாம் கொள்ளக் கூடாது; அவளுக்கும் இவ்வித உணர்ச்சியின் அறிகுறிகள் உண்டாயின. இராமேசனுடன் வாழ்ந்த வாழ்க்கையின் ஆரம்பத்திற் சென்ற சில மாதங்களில் கல்யாணத்தின் இரகசியத்தை விளக்கும்படியான சில அபூர்வ உணர்ச்சிகள் அவள் மனதில் எழுந்தன; பிறகு பள்ளிக்கூடக் கட்டினின்றும் அவிழ்த்து விடப்பட்டவளாய் இராமேசன் பால் திரும்பவந்த போது ஏதோ ஒரு அதிசய ஆனந்தக் கூத்தின் இன்னிசைக் கொப்ப அவள் மனது நர்த்தனம் செய்த சமயங்களும் கம

லாவின் ஞாபகத்திற்கு வந்தன. சைலஜாவின் பேச்சைக் கேட்டபோது கமலாவுக்கு அந்த அதிசய உணர்ச்சிகளின் தாத்பரியம் ஒருவாறு விளங்கிற்று. ஆயினும் அவளது சொந்த உணர்ச்சிகள் அவள் மனதில் அழுந்தாது மறைந்து போயினவாகையால் சைலஜாவுக்கும் விபினருக்கும் உள்ள அந்தரங்க சம்பந்தம் போலாகுமோ தனக்கும் இராமேசனுக்கும் இருந்த பற்றுதல்? இராமேசன் சற்றுப் பிரிந்தால் அவள் மனம் வருந்தியதோ? பெண்டிருறையும் பின் கட்டின் வாசலில் தன் மனைவியைக்காண காத்திருப்பவனோ இராமேசன்? இல்லையே.

ஞாயிற்றுக்கிழமை வந்ததும் சைலஜாவுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை; தன் புதிய சிநேகிதியை பகற்பொழுதெல்லாம் தனித்திருக்க விட்டுப் போவதற்கும் மனது வரவில்லை; விபினர் அருகில் இருப்பதற்குக் கிடைத்த வாரத்தில் ஒரு நாளையும் கமலாவின் பொருட்டுத் தியாகம் செய்யவும் இஷ்டமில்லை; அதேவீட்டில் இராமேசனும் இருக்க, கமலாவும் அவனும் பேசுவதற்கு சௌகரியங்கள் செய்யாவிடின், தனக்குக் கிடைத்த விடுமுறை நாளை மனதார எப்படி ஆனந்தமாய் கழிக்க முடியும். இராமேசன் கமலா இவர்களை மட்டும் சந்திக்கும்படி ஏற்பாடு செய்ய முடியுமானால்!

சைலஜா பெரியவர்களோடு கலந்து இதைப் பற்றி யோசனை செய்யவில்லை; ஆயினும் சக்கிரவர்த்தி 'மாமா' யோசனை செய்ய வருமட்டும் காத்திருப்பவரோ? "ஏதோ அவசரகாரியமிருக்கிறது வெளியூருக்குப் போக வேண்டும்; திரும்பிவர வெகு நேரமாகும்; தன்னைத்தேடி யாரும் வரமாட்டார்கள் வாசற்கதவை போகும் போது பூட்டிவிட்டுப் போகிறேன்" என்று இராமேசன் மனதில் ஆகும்படிக்கும் தன் மகள் சைலஜாவின் காதில் விழும்படிக்கும் சொல்லி விட்டு, சைலஜா கட்டாயம் இதன் அர்த்தத்தை அறிந்து கொள்வாள் என்ற நம்பிக்கையுடன் வெளிச் சென்றார்.

ஆற்றில் ஸ்நானம் செய்து விட்டுத் திரும்ப வீடு வந்ததும் சைலஜா கமலாவைப் பார்த்து "வா, அம்மா, தலையை வாரிமுடிக்கிறேன்." என்றாள்.

"என்ன அவசரம் இன்றைக்கு?"

"அப்புறம் சொல்லுகிறேன், தலைமயிரை வாரிப்பின்னியான பின்" என்று சைலஜா கூந்தலை வாரி விசித்திரமாய் அலங்கரித்துப் பின்னிப் புனைந்தபின், கமலா எந்தப் புடவையைக் கட்டிக் கொள்ள வேண்டும் என்று பெரிய தர்க்கம் உண்டாயிற்று.

பளபள வென்று ஒளிக்கும் பட்டுப் புடவை யொன்றைக் கமலா கட்டிக் கொள்ள வேண்டும் என்றாள் சைலஜா; அவளுடைய உட்கருத்து கமலாவுக்கு விளங்க வில்லை; ஆயினும் கடைசியில் அவளிஷ்டப்படியே இருக்கட்டும் என்ற கமலா ஒருவாறு சம்மதித்தாள்.

பகற் போஜனமான பின் சைலாஜா தன் கணவன் காதில் ஏதோ முணு முணுத்தாள்; உடனே அவர் காரியம் இருக்கிறது, சற்று வெளியே போய் வருகிறேன் என்று வெளிச் சென்றார்; அவர் சென்றபின் முன் கட்டிற்குப் போகும்படி கமலாவை ஏவினாள் சைலஜா. முன் சமயங்களில் கமலா இராமேசனைக் கண்டு பேசக் கூசினவளல்ல; அப்படிப் பேசுவதில் ஏதோ நாணுதற்கிடமுண்டு என்றதையும் அவள் அறிந்தவளல்ல; இராமேசனை முதல் முதலில் இவ்விதம் நாணமுறுவண்ணம் வலியவந்து பேசியதாலும் அப்படிப் பேசுவது தகாது என்று பரிகசிக்க தன்னொத்த தோழிமார் ஒருவரும் இல்லாததாலும் சங்கோசமின்றி இராமேசனுடன் வார்த்தையாடி வந்த கமலாவுக்கு இப்போது சைலஜா வேண்டிக் கேட்டுக் கொண்ட போதும் மனத்துணிவு உண்டாகவில்லை; சைலஜா எந்த சுதந்திரங் கொண்டு தன் கணவனுடன் பேசுகிறாளோ அந்த சுதந்திரம் தனக்கு இல்லாதிருக்க, யாசிக்குமொருவள்போல் இராமேசனை எப்படிப் போய்க் காண்பது?

தான் கமலாவுக்கு என்ன எடுத்துச் சொல்லியும் பயன் இல்லை என்று அறிந்ததும் சைலஜா, "முதல் முதலில் தானே வலியப் போய்ப் பார்ப்பது கௌரவக்குறைவு என்று கருதுகிறாள்; வாஸ்தவந்தானே! ஒருவரை யொருவர் பார்க்காமல் பிரிந்து இத்தனை நாளாகியும் இராமேசன் ஏதாவது சாக்குச்சொல்லி இவளை காண முயன்றானோ? இல்லையே" என்று எண்ணினாள்.

தன் தாயார், சாப்பிட்டானபின், ஒரு அறையில் கதவை மூடி விட்டுத்தூங்கிக் கொண்டிருந்தாள்; ஆகவே, சைலஜா விபினரிடம் சென்று "கமலா தன்னறைக்கு வரச்சொல்லி அழைத்தாள் என்று இராமேச பாபுவிடம் சொல்ல வேண்டும்; தாராளமாய் அவர் உள்ளே வரலாமே; அப்பா கோபித்துக்கொள்ள மாட்டார்; அம்மாவுக்குத்தெரியாது, தூங்கிக் கொண்டிருக்கிறாள்; ஆகையால் உள்ளே வந்து கமலாவுடன் அவர் பேசலாமே." என்று சொன்னாள்.

விபினன் சாது, எதிர்த்துப் பேசும் சுபாவமில்லை; இவ்விதம் தூது சொல்ல அவன் மனம் இசையவில்லை என்றாலும் தன் விடுமுறை நாளை அமரிக்கையுடன் கழித்து உல்லாசமாக இருப்பதைக் கெடுத்துக் கொண்டு தன் மனைவியின் உத்திரவை மீறி நடக்க அவனுக்கு இஷ்டமில்லை.

இராமேசன் வெளிக்கட்டில் ஒரு அறையில் கம்பளத்தின் மேல் சாய்ந்து கொண்டு "பையனியர்" என்ற தினசரிப் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தான்; சமாசாரங்களை யெல்லாம் படித்தாய் விட்டது; பொழுது போக்குக்காக அதில் காணப்பட்ட விளம்பரங்களை வாசித்துக் கொண்டிருக்கும்போது விபினன் அவனறையுட் புகவே, இராமேசன் "வாருங்கள், விபின பாபு, வாருங்கள்" என்று உத்சாகமாய் அழைத்தான். சகவாசத்திற்கு மிகவும் யோக்கியர், அவருடனிருந்தால் நன்றாய் பொழுது போகும் என்று விபினரைப் பற்றி விசேஷமாய் சிலாகிக்க முடியாதென்றாலும் தனியே அயலூரில் மத்தியானப் பொழுதைப் போக்குவ தென்றால் அவரையும் ஒரு நல்வரவாகவே கொள்ளலாமன்றோ?

அப்படி அழைத்தும் விபினர் உட்காராமல் தலையைச் சொரிந்து கொண்டே "நீங்கள் உள்ளே வரவேண்டும் என்கிறாள்" என்றான்.

"யார்? கமலாவா?"

"ஆம்"

இராமேசன் திடுக்கிட்டான்; கமலாவை இனி பேருக்கு மட்டும் மனைவி யென்று கருதாமல் வாஸ்தவத்திலும் மனைவியாகவே கொள்ள வேண்டுமென்று அவன் நிச்சயித்திருந்தான்; இருந்தாலும், இப்பொழுது பிரிந்து இருக்க நேரிட்டது

அவனுக்கு சௌகரியமாகவே தோன்றிற்று; மறுபடியும் முன்போல் மனம் கலங்கி நிச்சயமற்றிருக்கலானான்; கமலா தனது இன்னுயிர் காதலியாய் உண்மையில் ஸஹதர்மசரீயாய் இருப்பின் என்ன ஆனந்தமாய் இருக்கும் என்று அடிக்கடி நினைந்து கொள்வான், வாஸ்தவந்தான்; ஆயினும் எப்படி தற்கால நடையை மாற்றுவது? புது வழியில் எப்படித் தொடங்குவது? என்பது அவனுக்கு விளங்கவில்லை; கொஞ்ச காலமாய், தனக்கும் கமலாவுக்கும் இடையில் உண்டாயிருந்த சங்கோச முதலிய தடைகளை நீக்கி எவ்விதம் அவளுடன் பிரியமாகப் பழகத் துவக்குவது என்று அவனால் தீர்மானிக்க முடியவில்லை; ஆகையால் அவன் ஒரு தனி வீடு பார்ப்பதற்கு அவசரப்படாதிருந்தான்.

விபினன் தன்னிடம்வந்து இந்தச் செய்தியைச் சொன்ன போது, ஏதோ அவசர காரியமாய்த் தன்னிடம் பேச வேண்டியே அழைத்திருப்பாள் என்று நினைத்தான் இராமேசன்; அப்படி நினைத்த போதும் அவனுக்கு ஒருவித ஆனந்த உணர்ச்சி உண்டாயிற்று. ''பையனியர்'' பத்திரிகையைக் கீழே வைத்து விட்டு, நிச்சப்தமான பிற்பகல் வேளையில், விபினனின் பின் இராமேசன் போகும்போது தன்னிணையை நாடிச் செல்லும் காதலனின் குதூகலம் அவனது உள்ளத்திலும் எழுந்தது.

விபினன் ஒரு கதவண்டை அவனைக் கொண்டு வந்து விட்டு மறைந்தான்.

சைலஜா தன் பொருட்டு ஏற்பாடு செய்ய முயலுவதை விட்டு தன் புருஷனை நாடிச்சென்று விட்டாள் என்று நினைத்திருந்த கமலா கதவண்டை உட்கார்ந்து வெளியே தோட்டத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்; சைலஜா கமலாவின் மனதில் இருந்த காதலை அவளறியாமலே கிளப்பி விட்டாள்; வெளியே தோட்டத்தில் வீசிய இளங்காற்று எப்படி இலைகளை அலைத்து சப்திக்கச் செய்ததோ அதுபோல் அடிக்கடி கமலாவின் மனதினின்று எழுந்த பெருமூச்சு வெளியிடப்படாத அவளது துயரைக் கிளப்பிற்று.

திடீரென இராமேசன் அறையுள் வந்து அவளருகில் நின்று ''கமலா'' என்று மெல்லிய குரலில் அழைத்ததும் அவள் திடுக்கிட்டுப் பயந்தெழுந்தாள்; அவள் உடல் படபடத்தது; இதற்கு முன் அவன் முன்னிலையில் சங்கோசமின்றி நடந்து கொண்ட அவளுக்கு அப்பொழுது நாணமும் வெட்கமும் உண்டாகவே அவனை முகங்கொண்டு வெட்கிப் பார்க்க முடியாமல் தலை குனிந்து முகஞ்சிவந்து ஒதுங்கி நின்றாள்.

அவள் அலங்கரித்து உடுத்திருந்த நல்லாடையையும் புதிய உணர்ச்சியோடு முன்னிருந்த அவளது தோற்றத்தையும் கண்ட இராமேசனுக்கு அவள் வேறொரு புதிய கமலாவாய் தோன்றினாள். இப்படி திடீரென, தான் எண்ணியிராத அற்புதமாய் கமலாவைக்கண்ட இராமேசன் மனம் அவளுடைய சௌந்திரியத்தில் ஈடுபட்டது; மெதுவாய் நெருங்கி மெல்லிய குரலுடன் அவளைப் பார்த்து,

''என்னை வரச்சொன்னாயா, கமலா?'' என்று கேட்டான் இராமேசன்.

கமலா முகச்சுளுக்கத்துடன்: ''இல்லையே! நான் எதற்கு உங்களை வரச்சொல்லுகிறேன்?'' என்றாள்.

''என்னை வரச்சொல்வது ஒரு குற்றமா என்ன, கமலா?''

''உங்களை வரும்படி சொன்னாலன்றோ?'' என்று மறுபடியும் அழுத்தமாய் பேசினாள் கமலா.

''சரி, இருக்கட்டும்; நான் தான் அழைக்காமலே வந்திருக்கிறேன்; அதற்காக, என்னை அவமானப்படுத்தி பேசாமல் போகச் செய்வாயோ?''

''அவர்களுக்கு எல்லாருக்கும் தெரிந்து விடும் நீங்கள் வந்தது; கோபித்துக் கொள்வார்கள்; போங்களேன்! நான் வரச்சொல்ல வில்லையே!''

''அப்படியே யாகட்டும்'' என்று இராமேசன் கமலாவின் கைகளைப்பிடித்துக் கொண்டு ''நீ என்னறைக்கு வா, அங்கே ஒருவருமில்லை.'' கமலா, மெய்பதர, அவனது பிடியினின்று திமிரிக்கொண்டு அடுத்த அறைக்குள் ஓடிக் கதவைத் தாளிட்டு விட்டாள்.

அப்போது தான் தெரிந்தது இராமேசனுக்கு, அந்த வீட்டிலுள்ள பெண்களில் யாரோ செய்த சூழ்ச்சியாக இருக்க வேண்டும் இது என்று; வெளிப்புறமிருந்த தன்னறைக்குத் திரும்பினான்; மறுபடியும் கம்பளத்தில் சாய்ந்து ''பையனியர்'' பத்திரிகையைக் கையிலெடுத்தான்; விளம்பரங்களை மேலும் கீழுமாய் கண்ணிட்டுப் பார்த்தான்; ஆனால் மனது மட்டும் எங்கேயோ சென்று விட்டது; எண்ணங்கள் ஒன்றன் பின்னொன்றாய் மேகங்கள் காற்றின் முன் விரைந்து ஒன்றோடொன்று தாக்கி யோடுவதுபோல் ஓடி அவனது மனதைக் கலக்கின.

கமலா தாளிட்டிருந்த கதவை சைலஜா தட்டினாள்; பதில் இல்லை. ஜன்னல் பலகணியினூடே கையை விட்டு தாப்பாளைத் தள்ளிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள்.

ஆ! என்ன ஆச்சரியம்! கமலா முகத்தைக் கையால் மூடி விம்மி அழுதுகொண்டு தரையில் விழுந்துகிடந்தாள். கமலாவுக்கு இவ்விதம் அழும்படி என்ன நேரிட்டது என்று அறிய முடியாமல் சைலஜா அவளருகில் உட்கார்ந்து கொண்டு ''என்னம்மா, என்ன உனக்கு? என்னசமாசாரம்? ஏன் அழுகிறாய்?''

''அவரை ஏன் வரச்செய்தாய்? இப்படிச் செய்வாயா?''

கமலாவாலும் திடீரென தான் இவ்விதம் அழுததற்குக் காரணம் சொல்ல முடியவில்லை. அவள் அநேக நாட்களாய் அகத்துள் மறைத்து வைத்திருந்த துயரம் யாருக்கும் தெரியாது.

தனது மனக்கோட்டையில் விசித்திரமான மாளிகைகள் கட்டி அவைகளுக்கு அழகுசெய்யும் தருவாயில் இராமேசன் வந்தானே! அவள் கண்முன் மெதுவாய் தோன்றி யிருந்தால் எல்லாம் சரியாக முடிந்திருக்கக்கூடும்; அப்படியில்லாமல் தன்னை வரச்சொன்னாள் என்று தான் நினைத்ததாகச் சொன்னவுடன் அவளுடைய மனக்கோட்டைகளெல்லாம் இடிந்து பொடிந்து மண்ணாயின. தன்னை பள்ளிக்கூட விடுமுறை நாட்களிலும் பள்ளிக்கூடத்திலேயே கைதியைப்போல் நிறுத்திவைக்க அவன் முயன்றதும், பிறகு கப்பலில் வரும்போது தன்னைச் சற்றேனும் கவனியாமல் இருந்ததும் பிற நினைவுகளும் அவள் மனதை வியாபித்தன.

தானுய் நெருங்கிப்பழக வருவது வேறு, கூப்பிட்டனுப்பினதற்கு ஆஜராவது வேறு அல்லவா; காவிப்பூருக்கு வந்த பிறகு தான் இவ்விரண்டு முறைகளுக்குள்ள தாரதம்மியம் அவள் மனதில் செவ்வனே புலப்பட்டது.

சைலஜாவுக்கு இவை யெல்லாம் தெரியுமோ? இராமேசனுக்கும் கமலாவுக்கும் இடையே பெருந் தடைகள் இருக்கக்கூடும் என்ற எண்ணம் அவளுக்கு உதிக்குமோ?

மெதுவாய் கமலாவின் தலையைத் தூக்கித் தன் மடிமீது சாய்த்து "என் அம்மா! இராமேச பாபு உன்னிடம் ஏதாவது பிரியமற்ற வார்த்தைகள் பேசினுரோ? என் கணவன் போய்க் கூப்பிட்டார் என்று வருத்தப்பட்டுக் கொண்டாரோ! நான் செய்த காரியம் இது என்று நீ சொல்லக் கூடாதா?"

"இல்லை; இல்லை; அதைப்பற்றி அவர் ஒன்றும் சொல்லவில்லை; அதிருக்கட்டும் நீ ஏன் அவருக்குச் சொல்லி யனுப்பினுய்?"

"நான் செய்தது தப்புத்தான்" என்று வருத்தமுடன் சைலஜா "என்னை மன்னிக்க வேண்டும்." என்றுள்.

கமலா உடனே எழுந்து உட்கார்ந்து, சைலஜாவைக் கழுத்தில் கட்டிக்கொண்டு "நீ போ, அம்மா, விபினபாபு காத்திருப்பார்" என்றுள்.

"பையனியர்" பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்த இராமேசன் அதைத்தூர எறிந்து விட்டு: "போதும், போதும்; நாளையே நான் கல்கத்தாவுக்குப் போய் என் காரியங்களை முடித்து வரவேண்டும். இனியும் கமலாவை என் மனைவியாக்கத் தயங்கினுல் நான் பெரும் பாபியாவேன்" என்று எழுந்தான்.

——:(0):——

ஆரிய சரித்திரம்.

நீதிக் கதைகள்.

சுமார் 300 பக்கங்கள் உள்ளது. சித்திரப்படங்களும் அமையப்பெற்றது, நான்காம் பதிப்பு. தெள்ளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு, உயர்ந்த கடிதத்தில் பெரிய எழுத்துக்களால் அச்சடிக்கப் பட்டு அழகாய் பயிண்டு செய்யப்பட்டுள்ளது.

விலை ரூ. 1—0—0.

ஸ்ரீ கிருஷ்ணன் தூது.

இது வில்லிபுத்தூரார் பாரதத்தைத் தழுவி, பாரதகதையை ஆதியோடந்தமாகச் சுருக்கமாகவும், கிருஷ்ணன் தூதுச் சருக்கத்தை விரிவாகவும் அவ்வவ்விடங்களில் சமயோசிதத்துக் கேற்ப வில்லிபுத்தூரார் அரிய பாக்களின் மேற்கோளுடனும், பள்ளியிற்பயிலும் சிறுவர் சிறுமியர்களுக்கும் ஏனையோருக்கும் மகாபாரதக்கதை இனிது விளங்குமாறு இனிய தெள்ளிய நடையில், வித்வான் ஆறுமுக சேர்வையவர்களால் எழுதப்பட்டது. படிக்கப் படிக்க சுவையை உண்டு பண்ணும் சகல நீதிகளும் அமையப்பெற்றது.

விலை ரூ. 1—0—0

கணேஷ் கம்பெனி,
39, தம்பு செட்டி தெரு, சென்னை.

மதிப்புரை,

கர்மயோகம்:—(ஸ்ரீராமகிருஷ்ண மடம், மைலாப்பூர். 1922.)

ஸ்ரீமத் விவேகாநந்தசுவாமிகள் ஆங்கில பாஷையில் எல்லோரும் எளிதில் உணரும்படி உபந்நியசித்தருளிய "கர்மயோகம்" என்ற விஷயத்தை புஸ்தக ரூபமாக ஆங்கிலத்தில் ஸ்ரீராம கிருஷ்ண மடத்தார் அச்சிட்டிருந்தனர். சுவாமிகளது பெருமை தமிழ் நாட்டில் பரவவே, அவரது உபந்நியாசங்களை ஆங்கில மறியாதவரும் தாய் பாஷையிலேயே வாசித்தது இன்புறும்படி செய்வது ஷை மடத்தாரின் கடமையாயிற்று. இக்கருத்தைக் கொண்டு ஷை மடத்தார் தமிழில் "ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்" என்றொரு மாதப் பத்திரிகையை பிரசுரம் செய்து வருகின்றனர். அந்த பத்திரிகையை நடத்துவதிலும் மற்ற மடத்து விஷயங்களிலும் முயற்சி செய்துவரும் பண்டித மயில் வாகனனர், சுவாமிகளின் உபந்நியாச மொழிகளை தமிழாக்குவதைக் காரியமாகக்கொண்டு, அமெரிக்காவில் 1895-ம் ஆண்டில் ஆங்கில மொழியில் உபந்நியசிக்கப்பட்ட "கர்ம யோக"த்தை மொழி பெயர்த்திருக்கின்றனர். இது ஒவ்வொரு தமிழர் கையிலும் இருக்க வேண்டிய அவசியமான புஸ்தகம். நம்முடைய மத விஷயங்களைப்பற்றி தெளிவுற உபந்நியசிப்பதில் சுவாமிகள் மிக மேம்பட்டவர் என்பதை நாம் கூறுவது அனுவசியம். மொழிபெயர்ப்பு சிலாக்கியமான நடையில் எழுதப்பட்டுள்ளது. ஆங்காங்கு சில குறிப்புகள் சுவாமிகளால் பேசப்பட்ட நவீன சாஸ்திர முடிவுகளையும் பிற அரிய விஷயங்களையும் தெளிவாக்குகின்றன. முதலதிகாரம் மூன்றும் அதிகாரத்தின் இறுதியில் விஷயங்களை எளிதில் மனனஞ் செய்ய உதவும் சூத்திரங்கள் வரையப்பட்டுள்ளன.

மதவிஷயங்களில் மேம்பட்டோர் என்று பெருமை கூறும் இந்துக்களான நம்மில் ஒவ்வொருவரும் சுவாமிகளின் உபந்நியாசங்களை கற்றுணர்வது அவசியமன்றோ?

இனும்! இனும்!!

ஒவ்வோரு பக்கமும்
சரீர சுகத்தைப்பற்றி
போதிக்கிற தென்பதை
நமது

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தைப் படிப்பதால் அறியலாம், தேகத்தைப் பாதுகாப்பதற்கு அனுபவத்துக்கு ஒத்துள்ள நீதி வாக்கியங்கள் நிறைந்து கிடக்கின்றன.

உங்கள் விலாசத்தை தெரிவித்தால் தபாற் செலவின்றி இனமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்
தபால் பெட்டி நெ. 1252,
26, பிராட்வே, மதராஸ்.

சுதேசியமானது! உபயோகமுள்ளது!!

அமர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

ஜனரஞ்சனி.

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் பத்திரிகை. தமிழ் இலக்கியம் தேச சரித்ரம், சாஸ்த்ரங்கள், மதசம்பந்தமான விஷயங்கள், நாவல்கள், சிறு கதைகள், ஹாஸ்யங்கள், விநோதவிஷயங்கள் முதலிய வாசிக்க ரஸமானபல வியாஸங்கள் அடங்கியது.

வருஷ சந்தா ரூபாய்	2	0	0
மேல் நாடுகளுக்கு ரூபாய்	3	0	0
மாதிரிப்பிரதி அணா	0	2	0

"ஜனரஞ்சனி" ஆபீஸ்,
4, கொண்டிசெட்டி தெரு மதராஸ்

The United India Life Assurance Co., Ltd.

Head Office: Madras

(Established 1906)

இந்தியர் நிர்வாகத்திலிருக்கும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி சென்னையில் இதொன்றே. உயிரின் நிலையில்லாமையை நினைத்து, நம் தமிழ் நாட்டார் யாவரும் இக்கம்பெனியில் சந்தாதாரராக நலம் பெறுவாராக. சென்ற வருஷத்தில் கிடைத்துள்ள லாபத்திலிருந்து ரூ. 1000 பாலிஸிக்கு ரூ. 15 வீதம் சந்தாதாரர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஏஜெண்டுகள் தேவை.

Apply to:—K. S. Gopalayya,
MANAGER.

கதர்! கதர்!! கதர்!!! ஸ்ரீ பண்டார் சுத்த சுதேசிய உடை!!!

பெயர்பெற்ற மோரதாபாத் கதர் உடைகளின் நிலயம்.

விலை வெகு குறைவானது. இந்தியா, பர்மா, சிலோன் எங்கும் சுதேசிய பண்டக சாலைகளுக்கு நாங்களே கதர் உடைகள் மொத்தமாய் அனுப்புகிறோம். ஓர்முறை வாங்குபவர் நீடித்து எங்களிடமே வியாபாரம் செய்வார்கள்.

கதர் துணிகள்.

நெ. 1.	10 கஜம்	× 25"	ரூ. 2½ முதல்	ரூ. 3	வரை
" 2.	12 "	× 27"	" 4	" 6	"
" 3.	16 "	× 34"	" 6	" 9	"
" 4.	18 "	× 36"	" 8	" 12	"
" 5.	20 "	× 44"	" 11	" 13	"

வெளுக்கப்படாத கதர் உடைகள் பீஸ் ஒன்றுக்கு கால் ரூபாய் குறைவாக கிடைக்கும். ஆர்டருடன் முன்பணமாக 4ல் 1 அனுப்பவேண்டும்.

தந்தி விலாசம்: 'Shree.'

கதர் சேலைகள் முதலியன.

10 கஜம்	× 45"	ரூ. 4½ முதல்	ரூ. 6	வரை
9½ "	× 40"	" 3	" 5	"
3 "	× 1½ கஜ	" 2	" 3	"

எங்களிடம் கிடைக்கும் வேறு பலவித சுதேசிய துணிகளின் விலை விபரங்களை எழுதிக் கேட்டறிந்துகொள்ளலாம்.

SHREE BANDAR,
Mandi Bans Street,
Moradabad, U. P.

ஒற்றுமை.

(நான்காம் வருடம்.)

இது இந்திய மக்களிடம், சகோதர நட்பு, சமரச உணர்ச்சி, ஜீவகாருண்யம், உயர்தர அறிவு நற்குண நல்லொழுக்கத்தைப் போதிக்கும் விஷயங்கள், நாவல்கள், சரித்திரங்கள் முதலியன அடங்கிய ஒரு மாதாந்தரப் பத்திரிகை.

வருஷச் சந்தா முன் பணம் அனுப்புவோருக்கு அணா 12.
ஜீவிய சந்தா ரூபாய் 10-0-0.
வி. பி. மூலமாய் பெறுவோருக்கு ரூ. 1
வெளி நாட்டுக்கு ரூ. 1-8-0.

பி. வி. கண்ணன் அண்டு கோ,
சைதாப்பேட்டை, சென்னை.

லக்ஷ்மிகாந்த கஸ்தூரி மாத்திரை.

இந்த சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களில் ஒன்று மிக்க அருமையான மருந்துகளால் முடிவு பெற்று வாய்வு, பித்த சிலேஷ்மத்தை அனுசரித்த வியாதிகளுக்கு தனியாக அல்லது தாம்பூலத்திலாவது உபயோகிக்க தகுந்த சஞ்சீவி.

சுமார் 200 மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு விலை அணா 6.
டஜன் 1-க்கு விலை ரூ. 4.

ஸ்ரீ நடராஜ ஔஷத சாலை,
55, Narayana Mudali, Street,
G. T. MADRAS.